IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.

O.S.No. 116/2016
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 01.00 PM.

<u>வா.சா. 1 சாட்சி முத்துகுமார் த.பெ.செல்லக்கண்ணு</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 18.08.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் மொத்தம் எத்தனை லேயவுட்டு ஏற்படுத்தினேன் என்றால் ஒரு லேயவுட் மட்டுமே ஏற்படுத்தினேன். வேறு லேயவுட் போடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது பத்தி 5 மற்றும் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பத்தி 4 ல் 2 ஏக்கர் 77 செண்டு விஸ்தீரணம் உள்ள நிலத்தில் 2 லேயவுட் தயாரித்துள்ளேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

2. எனது நிரூபண வாக்குமூலத்தையும், அசல் வழக்குரையையும் தாக்கல் செய்தது யார் என்றால் நான்தான் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள வாசகங்களை நான்தான் சொன்னேன் என்றால் சரிதான். பிராது பத்தி 5, நிரூபண வாக்குமூலம் பத்தி 4 ல் உள்ள விசயங்கள் என்னால் சொல்லப்பட்டதா என்றால் என்னால்தான் சொல்லப்பட்டது.

3. எனது பிராது படியும், நிரூபண வாக்குமூலப்படியும் 2 லேயவுட் உள்ளது என்றால் அது மாற்றம் செய்யப்பட்ட லேயவுட் ஆகும். முதலில் லேயவுட் எந்த ஆண்டு தயார் செய்தேன் என்றாலும் மாறுதல்

செய்யப்பட்ட லேயவுட் எந்த ஆண்டு தயார் செய்யப்பட்டது என்றால் தெரியாது. மாறுதால் செய்யப்பட்ட லேயவுட் மூலம் சொத்துக்களை எப்போது முதலில் விற்பனை செய்ய ஆரம்பித்தோம் என்றால் 1995ம் வருடமாகும். மொத்தம் எத்தனை பிளாட்டுகள் தயார் செய்தோம் என்றால் 35 பிளாட்கள் இருக்கும்.

4. 35 பிளாட்கள் தவிர வேறு எந்த பிளாட்டுகளும் இல்லை என்றால் சரிதான், அதை தவிர 16 செண்டு தனித்து விடப்பட்டுள்ளது. மாற்றம் செய்யப்பட்ட லேயவுட்டில் அனைத்து பிளாட்டுகளும் விற்பணை செய்துவிட்டோம் என்றால் சரிதான். மேற்படி 35 பிளாட்டுகளுக்கும் கிரைய பத்திரம் உண்டு என்றால் சரிதான். நான் விற்பனை செய்த மேற்படி 35 பிளாட்டுகளின் கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் எவ்வளவு கிரையம் செய்தேன் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

5. மேற்படி லேயவுட்டைதான் நீதிமன்றத்தில் வா.சா.ஆ. 5 ஆக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ5 ல் எத்தனை பிளாட்டுகள் உள்ளது என்றால் 57 பிளாட்டுகள் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் தற்போதுதான் லேயவுட் கிடைக்கபெற்றது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

6. நான் தயார் செய்த மாற்றம் செய்யப்பட்ட லேயவுட் வா.சா.ஆ5 கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ5 தான் மாற்றம் செய்யப்பட்ட லேயவுட் ஆகும். மேற்படி வா.சா.ஆ5 ஆவணம் வழக்கு தாக்கல் செய்தபோது எனது கைவசம் இருந்தது என்றால் சரிதான். என் கைவசம்

இருந்தபோதும் வழக்கு தாக்கல் செய்யும்போதே தாக்கல் செய்யாததிற்கு என்ன காரணம் என்றால் ஆரம்பத்திலேயே தாக்கல் செய்துவிட்டோம்.

7. வா.சா.ஆ5 யை வழக்கு தாக்கல் காலத்தில் தாக்கல் செய்திருந்தபோதும் எனது முந்தைய முதல் விசாரணையில் தாக்கல் செய்யாமல் கூடுதல் முதல் விசாரணையில் மட்டுமே மனு செய்து அனுமதிபெற்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஏற்கனவே தாக்கல் செய்தது இல்லை என்பதால் திரும்பவும் தாக்கல் செய்தோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி வா.சா.ஆ5 தாக்கல் செய்தது இல்லை என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ5 ஆவணம் நீதிமன்றத்தில் முதலில் தாக்கல் செய்தது இல்லை என்று எனக்கு யார் கூறியது என்றால் எனது வழக்கறிஞர் ஆகும்.

8. மேற்படி கூறியதை நிரூபண வாக்குமூலத்தில் ஏன் கூறவில்லை என்றால் கூறியுள்ளேன். அவ்வாறு வா.சா.ஆ5 ஆவணம் முதலில் தாக்கல் செய்தது காணவில்லை என்பது எனது முதலில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் மற்றும் கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் கூறாமல் கூறியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. வா.சா.ஆ5 ஆவணம் யாரால் தயார் செய்யப்பட்டது என்றும் எதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது என்றும் வா.சா.ஆ5 ல் காணப்படவில்லை என்றால் சரிதான். ஒரு லேயவுட் தயாரிப்பதற்கு உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் வா.சா.ஆ5 ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் தெரியாது.

10. வா.சா.ஆ5 ல் எந்த தேதி தயாரிக்கப்பட்டது என்றும் எந்த தேதியில் கையெழுத்து செய்யப்பட்டது என்றும் குறிப்பிடப்படவில்லை என்றால்

சரிதான். லேயவுட் தயார் செய்த இன்ஞ்னியர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எப்போது வா.சா.ஆ. 5 யை என்னிடம் இன்ஞ்னியர் கொடுத்தார் என்றால் தெரியாது.

11. எந்த ஆவணங்களின் அடிப்படையில் வா.சா.ஆ5 தயார் செய்யப்பட்டது என்றால் தெரியாது. நான் என்ன ஆவணங்கள் கொடுத்தேன் என்றால் தெரியாது. வா.சா.ஆ 4 மாதிரி வரைபடம் மற்றும் வழக்கு பிராது, நிரூபண வாக்குமூலம் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளபடி வா.சா.ஆ5 ல் எதுவும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக சர்வே எண்கள் வா.சா.ஆ– 5 ல் காணப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

12. வா.சா.ஆ5 தற்போது வழக்கிற்கு தேவை என்பதால் என்னால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ5 தயார் செய்தவரை நீதிமன்றத்தில் விசாரித்தால்தான் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ5 ல் உள்ள முத்திரையை வெளியே யார் மூலமும் தயார் செய்துகொள்ளலாம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5ல் உள்ள கையெழுத்து யார் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்றால் சரியல்ல.

13. வா.சா.ஆ 5 ல் உள்ள கையெழுத்து செய்தவரை விசாரித்தால்தான் வா.சா.ஆ 5 குறித்து தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ5 ஆவணம் வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 01.45 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.18 10:38:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.